**Kalanjiyam International Journal of Tamil Studies**
**களஞ்சியம் - சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்**
Peer-Reviewed | Open Access | Crossref | Google Scholar
SJIF Impact Factor 3.5| Multidisciplinary
DOI: https://doi.org/10.63300/kijts05sp062026.03
https://ngmtamil.in/

# Multifaceted Thoughts in the Film Lyrics of Vaali

**K.Vidhya[1*], Dr. G.Krishnan[2],**
[1]Ph.D. Research Scholar, Department of Tamil, Meenakshi College of Arts and Science, Meenakshi Academy of Higher Education and Research (Deemed to be University), Chennai - 78.
ORCiD: https://orcid.org/0009-0006-8646-4675.
[2]Professor, Department of Tamil, Faculty of Humanities and Science, Meenakshi Academy of Higher Education and Research, Deemed University, Chennai - 78, Tamilnadu, India.
ORCiD: https://orcid.org/0009-0004-4832-6074, EMail: govikrishnan2013@gmail.com.
*Corresponding Author Email: vidhya.k050596@gmail.com Tel: 9962716749.

**Article Info**
Received on 27-June-2026, Revised on 29-June-2026, Accepted on 29-June-2026, Published on 01-July-2026

**Abstract:**
From the Sangam era to the present modern age, poetry has held a unique value and place. Historical records reveal that this stage of development adapted itself to the times. Poets and scholars have endeavored to bring about social change by instilling various ideas among the people through literature. Emerging and developing in Tamil Nadu at the beginning of the twentieth century, films have been functioning as a medium for the emotional exchange of information among the public, as a source of entertainment, and as a document recording culture. India is one of the countries with a globally developed film industry. Tamil Nadu has made a significant contribution to the soaring fame of the Indian film industry. The success of Tamil films which serve as a vehicle for carrying elements of Tamil culture and heritage to nations across the globe is due to the fact that many creators and artists have sacrificed their lives for them. Poet Vaali stands foremost among the poets who gifted the world of Tamil cinema with monumental, timeless creations throughout their lives. He has carved a unique niche for himself in the world of Tamil literature through his works. Although he presented literary works to the Tamil people in various forms such as poetry, epics, essays, and prose he remains firmly etched in the hearts of Tamils worldwide to this day through his film songs. This research paper aims to examine the life events of the illustrious poet Vaali and trace his journey to the pinnacle of fame.

***KEYWORDS:*** *Family, love, The Significance of a Mother, the bond Between Siblings, Work as Worship, Romance, Politics, Dravidian Ideology.*

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).

Publisher's Note: The views, opinions, and information presented in all publications are the sole responsibility of the respective authors and contributors, and do not necessarily reflect the views of Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi and/or its editors. Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi and/or its editors hereby disclaim any liability for any harm or damage to individuals or property arising from the implementation of ideas, methods, instructions, or products mentioned in the content.

# வாலியின் திரையிசைப் பாடல்களில் பன்முகச் சிந்தனைகள்

[1]**கு.வித்யா,** முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை,
மீனாட்சி கலை மற்றும் அறிவியல் கல்லூரி, மீனாட்சி உயர் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் (நிகர்நிலைப் பல்கலைக் கழகம்) சென்னை - 78.
[2]**முனைவர் கோ. கிருஷ்ணன்**, பேராசிரியர், தமிழ்த்துறை,
மீனாட்சி கலை மற்றும் அறிவியல் கல்லூரி, மீனாட்சி உயர் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் (நிகர்நிலைப் பல்கலைக் கழகம்) சென்னை - 78.

**ஆய்வுச்சுருக்கம்**

சங்ககாலம் முதல் இன்றைய நவீனகாலம் வரையிலான கால கட்டத்தில் கவிதைக்கென்று தனி மதிப்பும் இடமும் உள்ளன. இத்தகைய வளர்ச்சிப் படிநிலையானது காலத்திற்கேற்பத் தன்னை வடிவமைத்துக் கொண்டதையும் வரலாற்றுச் செய்திகள் வழியாகக் காணமுடிகிறது. இலக்கியங்கள் மூலம் பல்வேறு கருத்துகளை மக்களிடையே புகுத்தி, சமூக மாற்றத்தை ஏற்படுத்தப் புலவர்களும் அறிஞர்களும் முயன்றுள்ளனர். இருபதாம் நூற்றாண்டு தொடக்கத்தில் தமிழ்நாட்டில் தோன்றி வளரத் தொடங்கிய திரைப்படங்கள் மக்களிடையே தகவல்களை உணர்வு பூர்வமாகப் பரிமாறிக் கொள்ளும் ஊடகமாகவும் பொழுதுபோக்கு அம்சமாகவும் பண்பாட்டுப் பதிவு ஆவணமாகவும் செயல்பட்டு வருகின்றன. உலகஅளவில் வளர்ச்சி அடைந்துள்ள திரைப்படத்துறையைக் கொண்டுள்ள நாடுகளில் இந்தியாவும் ஒன்றாக உள்ளது. இந்தியத் திரைப்படத்துறையின் வானளாவிய புகழுக்குத் தமிழகத்தின் பங்களிப்பும் அதிகமாக உள்ளது. தமிழர்களின் கலாச்சாரப் பண்பாட்டுக் கூறுகளை உலக நாடுகளுக்கு சுமந்து செல்லும் கருவியாகத் திகழும் தமிழ்த்திரைப்படங்களின் வெற்றிக்குப் பல படைப்பாளிகளும் கலைஞர்களும் தம் வாழ்வை தியாகம் செய்துள்ளமையே காரணமாகும். தமிழ்த்திரை உலகிற்கு தம் வாழ்நாள் முழுவதும் காலத்தால் அழிக்க முடியாத மாபெரும் படைப்புகளை வழங்கிய கவிஞர்களுள் தலைசிறந்தவர் கவிஞர் வாலி. இவர் தம்முடைய படைப்புகளால் தமிழ் இலக்கிய உலகில் தனி இடம் பிடித்தவர். கவிதை, காவியம், கட்டுரை, உரைநடை என்று பல்வேறு வடிவத்தில் இலக்கியப் படைப்புகளைத் தமிழ்மக்களுக்கு வழங்கினாலும், திரையிசைப் பாடல்கள் மூலம் உலகத்தமிழரின் மனதில் இன்றளவும் நிலைத்து நிற்பவர். அத்தகு சிறப்பு வாய்ந்த கவிஞர் வாலியின் அவருடைய வாழ்க்கை நிகழ்வுகள் எவ்வாறு வளர்ந்து புகழின் உச்சித்திற்குச் சென்றார் என்பது குறித்தும் ஆய்வு செய்யும் நோக்கில் இந்த ஆய்வுக்கட்டுரை அமைகிறது.

**திறவுச்சொற்கள்**

குடும்பம், அன்பு, தாயின் சிறப்பு, அண்ணன் தங்கை உறவு, செய்யும் தொழிலே தெய்வம், காதல், அரசியல், திராவிட சிந்தனை.

Copyright © Author(s), Issue DOI: https://doi.org/10.63300/kijts05sp052026 

**முன்னுரை**

ஒரு படைப்பாளியின் இலக்கிய ஆக்கத்தில் சமூகத்தின் அனைத்துக் கூறுகளையும் சரியாக விளக்காதபோது அவரை மட்டுமல்ல அவருடைய படைப்பையும் சமூகம் தனிமைப்படுத்திவிடும். சமூகத்தின் நிகழ்வுகளைப் படைப்பில் வெளிக்கொண்டு வர எண்ணும்போது, சமூகத் தாக்குதல் மட்டுமின்றி அவருடைய வாழ்க்கைப் பரப்பு, குடும்பம் என அனைத்தும் படைப்பிற்கு உந்துதலைத் தருகின்றன. திரைப்படப் பாடல்களுக்கு என்றால் கேட்கவே தேவையில்லை.அனைத்துக் கூறுகளும் அதனுள் மையமிடும். இதனால்தான் சமூகப் பண்புகளில் படைப்பாளிகள் ஒன்று கலந்தவர்களாகின்றனர். எனவே, சமுதாய அக்கறை கொண்ட எண்ணங்களையும் தன் மனத்தில் ஆழமாகப் பதிவு செய்து கொண்ட பின்பு தான் அதனைப் பிறருக்குத் தெரியப்படுத்த நினைக்கின்றனர். அந்த நிகழ்வுகளே இலக்கிய ஆக்கங்களாக உருவாகின்றன. மக்களுக்கு வாழ்வியல் பற்றிய சிந்தனையை சங்க காலத்திலேயே புலவர்கள் கூறத் தொடங்கிவிட்டனர். பிறருக்கு நல்லது செய்யாவிட்டாலும் தீயது செய்யாதிருத்தல் உயர்ந்த வாழ்க்கை அறமாகவே புறநானூறு மொழிந்துள்ளது.

**"யாதும் ஊரே யாவரும் கேளிர்**
**தீதும் நன்றும் பிறர்தர வாரா"**

**(புறநானூறு மூலமும் உரையும்., பா: 192)**

என்ற உயர்வான வாழ்வியல் உண்மைகளைக் குறிப்பிட்டுச் சொல்கிறது.

**குடும்பம்**

குடும்ப வாழ்வில் அன்பும் அறமும் கொண்டு வாழ்வது சிறப்பான வாழ்வாகக் கருதப்படுகிறது. அன்பு பண்பாகவும், அறம் பயனாகவும் அமைவது இல்வாழ்க்கை. பண்டைத் தமிழர் திருமண வாழ்வை இல்லறம் என்றனர். வாலியும் இக்கருத்தை உணர்த்தும் விதமாக,

**"ஆம்பளைபாதி பொம்பளைபாதி ஆகலாம்**
**அனுசரிச்சா குடும்பம் நடத்திப் போகலாம்**
**அழைத்தால் வரலாம் அன்பைப் பெறலாம்"**

**(முகூர்த்த நாள், 1967)**

குடும்பம் நடத்துவதற்கு இருவரும் சரிபாதியாக குடும்பப் பொறுப்பில் பங்கெடுத்து அனுசரித்தால் அன்பும் அனுசரனையும் உயிராகக் கொண்டு வாழலாம். இவையே மகிழ்ச்சியைத் தரும் என்கிறார் கவிஞர்.

**அன்பு**

மனம் ஒத்த அன்போடு கூடி வாழும் வாழ்வு சிறந்த இல்வாழ்வாகப் போற்றப்பட்டது. தலைவனும் தலைவியும் உடலும் உயிரும்போல அன்புடன் விளங்கியதை,

**“என் மாமன் அன்புக்கு**
**கோயில் கொண்ட தெய்வம் கூட ஈடில்லையே**
**எல்லாமே என் ராசா”**

**(எல்லாமே என் ராசாதான், 1995)**

கோவில் தெய்வத்தை விட அன்புக்கு உயிராக இருந்து காத்து வருபவர் என் மாமன் தான் அவர்தான் எனக்கு எல்லாம் என்ற கருத்தைப் பாடலில் கவிஞர் வாலி வெளிப்படுத்துகின்றார்.

**தாயின் சிறப்பு**

தாயைப் பற்றி இன்றும் சென்னையில் ஆட்டோக்களில் “தாயிருக்கும் காரணத்தால் கோயிலுக்கு போனதில்லை” என்ற வாசகத்தை காணமுடிகின்றது. தெய்வத்தை நேரில் பார்த்து மன நிம்மதி பெறுவதை போல வீட்டில் தெய்வமாகிய தாயை வழிபட்டால் நமக்கு மனமகிழ்ச்சியாகும். நினைத்தது அனைத்துமே கிடைக்கும். நமக்கு நேர்ந்த துன்பங்களை களையவைப்பவள் தாய்தான் என்பதை வாலி பாடலில் கூறுகிறார்.

**“சோறு போடத் தாயிருக்கா**
**பட்டினியப் பார்த்ததில்லை**
**தாயிருக்கும் காரணத்தால்**
**கோயிலுக்குப் போனதில்லை”**

**(சின்னத்தம்பி, 1991)**

என்ற பாடலில் பசி எடுக்கும் பொழுது சோறு போடுபவள் தாய்தான் தன் மகன் பட்டினியாக இருப்பதைப் பார்த்து அமைதியாக இருக்கமாட்டாள். வீட்டில் தாய் தெய்வமாக இருப்பதால் கோயிலுக்கு போவதேயில்லை. தாயை வணங்கினாலே அருள் கிடைக்கப் பெறுவதாகக் காட்டுகிறார். இதுபோல் அம்மாவின் பெருமைகளைப் பல்வேறு திரைப்படங்களில் திரைஇசைக்கவிஞர்கள் போற்றியிருப்பதைக் காணலாம்.

**அண்ணன் தங்கை உறவு**

தமிழ்க் கலாச்சாரத்தில் இந்த உறவுக்கு மிக முக்கிய இடமுண்டு. சங்க இலக்கியங்களில் குடும்ப உறவுகளில் அண்ணன், தங்கை உறவு முறைகள் இருப்பதைப் பார்க்கமுடிகிறது. குடும்பத்தில் தாய் தந்தையை போல் அண்ணன் தங்கை உறவு முறை இணை பிரியாதது இன்பத்திலும் துன்பத்திலும் பங்கெடுத்துக் கொள்பவர்கள் இதனை வாலியின் பாடல்களிலும் இடம் பெறுவதை,

**“பெண்டாட்டி சொல்லை தட்டாத பிள்ளை**
**நான் தேடி வந்த மாப்பிள்ளை**
**சீர் கொடுப்பேன் சிறையெடுப்பேன் - என்**
**தங்கச்சி முகத்தை சிரிக்க வைப்பேன்”**

**(மேஜர் சந்திரகாந்த், 1966)**

பெற்றோர் இல்லாத நிலையில், தன் தங்கைக்குத் திருமணம் நடக்கும் போது அவள் ஏங்கிவிடக் கூடாது என்று அண்ணன் உருகுகிறான். "உனக்குத் தாய், தந்தை இல்லை என்று நீ கவலைப்படாதே, உன்னைத் தாரை வார்த்துக் கொடுக்கவும், சீர் வரிசைகள் செய்யவும் உன் அண்ணன் நான் தாயாக நின்று கடமைகளைச் செய்வேன்" என்று ஆறுதல் கூறுவதாகத் திரைப்படப் பாடல்களில் காணலாம்.

**செய்யும் தொழிலே தெய்வம்**

தமிழ் திரையுலகில் தமிழ்த் திரையுலகில் ஐந்து தலைமுறைகளுக்கும் மேலாகத் தடம் பதித்த கவிஞர் வாலி, எளிய பாமர மக்களின் வாழ்வியலைத் தன் வரிகளால் செதுக்கியவர். நாட்டுப்புறத் தொழில்பாடல்களின் மரபை அப்படியே திரையிசைக்குக் கொண்டுவந்து, **தொழிலாளர்களின் உரிமைகளையும் உழைப்பின் உன்னதத்தையும்** பாடியதில் வாலிக்கு முக்கிய இடமுண்டு. நாட்டுப்புறத் தொழில்பாடல்களின் எளிய வடிவத்தையும் தாளக்கட்டையும் திரையிசைக்குத் தகுந்தாற்போல் மாற்றி, தமிழ் சமூகத்தில் தொழிலாளர்களின் மதிப்பையும் சுயமரியாதையையும் உயர்த்திப் பாடினார். இதனைக் கவிஞர் வாலி 'சந்திரமுகி' திரைப்படத்தில்,

**"எண்ணிப்பாரு கொஞ்சம் ஏர் பிடிக்கும் ஆள**
**சோத்தில் நாம் கை வைக்க சேத்தில் வைப்பன் கால"**
**(சந்திரமுகி, 2005)**

எனும் பாடல் வரியில் உழவு, மாநகராட்சி ஊழியர், முடிதிருத்தும் தொழிலாளர், துணிவெறுப்பவர் என்று பலரின் உழைப்பில் தான் மனிதர்கள் சுத்தமாக வாழமுடிகிறது என உழைப்பின் பெருமையைப் பாடலாக்கியுள்ளார்.

**காதல்**

"காதல் அடைதல் உயிரியற்கை" என்பார் பாரதிதாசன். காதல் என்பது உலகிலுள்ள அனைத்து உயிர்களின் இயல்பான பண்பாகும். இக்காதலால் தான் இவ்வுலகம் தழைத்து ஓங்கி நிற்கிறது. இத்தகைய காதலைச் சங்கப்புலவர் முதல் இன்றைய புதுக்கவிதைகள் வரை பாடிவருகின்றனர். காதலைப் பற்றிப்பாடாத கவிஞன் இல்லை எனலாம். இப்படியெல்லாம் காதல் பெயர் பெற்றிருந்தாலும் ஒருவரை ஒருவர் எதிர்பார்த்து கண்ணோடு கண்ணோக்கி மனத்தோடு மனம் பதித்து கருத்தோடு கருத்திணைத்து இருவரும் ஒருவராய் ஒன்றுபடுவதே காதல் வாழ்க்கை. காதலிப்பவர்கள் பேசும் வார்த்தை செந்தேன் என்பது கவிஞரின் பாடலில்,

**"காதல் கொண்டு பேசும்போது**
**சென்னை தமிழும் செந்தேன் தான்"** **(சென்னை 600028,2007)**

என்று காதலிப்பவர்கள் சென்னைத் தமிழில் பேசினால் செந்தேன் போல இனிப்பாக இருக்கும் என்ற கருத்தையும் காதலர்கள் பேசுவதற்கு மொழி ஒரு தடையாக இருக்காது என்பதையும் வாலி திறம்படப் பயன்படுத்தியுள்ளார்.

**அரசியல்**

தமிழகத்தில் அரசியல் வாதிகள் பகட்டு வாழ்க்கை வாழ்ந்து, போலி வாக்குறுதிகளை மக்களிடம் சொல்லிவிட்டுப் போலி அரசியல் வாதியாக வலம் வருவதையும், பணத்தாசையும், பதவி மோகமும் கொண்ட அரசியல் வாதிகள் நாளுக்கொரு கட்சியில் இணைந்து கொள்ளும் அவலநிலையையும் காணமுடிகிறது. அரசியலையும், அரசியல் வாதிகளையும், அதிகார வர்க்கத்தினரையும் திரைப்படங்கள் காட்சிப்படுத்தத் தவறவில்லை. 'நான் சிவப்பு மனிதன்' திரைப்படத்தில் பந்தல், மேடை அலங்காரம், தலைவர் படங்கள், சின்னங்கள், வாக்குறுதிகள், பரிசுப்பொருட்கள், கட்சிக் கொள்கைகள் எனப் பெருகி விட்டதைக் கவிஞர் வாலி,

**"பந்தலும் மேடையும் போட்டுக்குறான் - ஒரு**
**துண்டையும் தோளிலே மாட்டிக்குறான்**
**ஓட்டுகள் போட்டிடக் கேட்டுக்குறான் – அதைப்**
**போட்டதம் புத்தியை மாத்திக்குறான்**
**எல்லாமே வேஷந்தான் ஏதேதோ கோஷந்தான்**
**எங்கேயும் தில்லுமுல்லு திண்டாடுவது தேசந்தான்**
**எந்நாளும் கோழைகளா எதுக்கு வாழணும்**
**அப்பாவி மனுஷனெல்லாம் சிவப்பா மாறணும்**
**ஒருத்தனுமிங்கே சித்தனுமில்லே... புத்தனுமில்லே"**

**(நான் சிகப்பு மனிதன், 1985)**

எனப் பாடல் வரிகளில் நாளுக்கொரு கட்சியில் சேரும் அரசியல் வாதி கொள்கையை மாற்றிக் கொண்டே இருக்கின்றான். அரசியல் வாதிகளின் அநீதிகளைக் களைய எடுக்க ஒவ்வொரு குடிமகனும் உணர்ச்சிகொண்டு எழவேண்டும். சமத்துவ சமுதாயம் மலரவேண்டும். பொதுமக்கள் அடிப்படை உரிமைகளை அறிந்திருக்க வேண்டும் என அரசியல் வாதிகளின் அவல நிலைப் பற்றிப் பாடியிருப்பதைக் காணலாம்.

**திராவிடச் சிந்தனை**

திராவிட இயக்கத் தலைவர்களான பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் மு. கருணாநிதி மற்றும் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் ஆகியோருடன் நெருங்கிய நட்பு கொண்டிருந்தவர். கொள்கை பரப்புத் திரைப்படங்களான எம்.ஜி.ஆரின் பல படங்களுக்குத் **திராவிடச் சிந்தனைகள், பகுத்தறிவு மற்றும் சமூக நீதி** சார்ந்த அழியாப் பாடல்களை வாலி எழுதியுள்ளார்.

**"நான் ஆணையிட்டால் அது நடந்து விட்டால்**
**ஏழைகள் வேதனை படமாட்டார்**
**உயிர் உள்ளவரை ஒரு துன்பமில்லை**
**அவர் கண்ணீர்க் கடலிலே விழமாட்டார்**
**----- ----- ----- ----- ------**
**சிலர் ஆசைக்கும் தேவைக்கும் வாழ்வுக்கும் வசதிக்கும்**

**ஊரார் கால்பிடிப்பார் ஒருமானமில்லை அதில்**
**ஈனமில்லை அவர் எப்போதும் வால் பிடிப்பார்"**

**(எங்க வீட்டுப் பிள்ளை, 1965)**

என்ற பாடலில் திராவிட இயக்கத்தின் தந்தை பெரியார் விதைத்த '**சுயமரியாதை**' **(Self-Respect)** என்ற கருத்தை இப்பாடலின் இரண்டாவது சரணம் பிரதிபலிக்கிறது. சுயநலத்திற்காக மானத்தை விற்று, மற்றவர்களின் காலையும் வாலையும் பிடித்து வாழ்பவர்களைச் சாடி, மனிதன் சுயமரியாதையோடு வாழ வேண்டும் என்பதை வாலித் தனது அழுத்தமான சொற்களால் பதிவு செய்துள்ளார்.

**பொருளாதாரம்**

கவிஞர் வாலி அவர்கள் வெறும் காதல் மற்றும் குடும்ப உறவுகளைப் பற்றி மட்டுமல்லாமல், **சமூகப் பொருளாதாரம், ஏழை பணக்கார இடைவெளி மற்றும் பணத்தின் ஆதிக்கம்** குறித்தும் பல தத்துவப் பாடல்களை எழுதியுள்ளார். பொருளாதார ஏற்றத்தாழ்வுகளையும், பணம் மனித வாழ்வை எவ்வாறு பாதிக்கிறது என்பதையும் விவரிக்கும் வாலியின் பாடல்,

**"படைத்தவன் மேல் பழியுமில்லை**
**பசித்தவன்மேல் பாவமில்லை**
**---- ---- ----- -----**
**இல்லை என்போர் இருக்கையிலே**
**இருப்பவர்கள் இல்லை என்பார்**
**மடி நிறையப் பொருளிருக்கும்**
**மனம் நிறைய இருளிருக்கும்"**

**(படகோட்டி, 1964)**

எனும் வரியில் அளவற்ற பணம் மட்டுமே ஒருவனுக்கு நிம்மதியான வாழ்வைத் தந்துவிடாது என்ற உன்னதப் பொருளாதார உண்மையை இப்பாடல் பேசுகிறது. பெரும் பணம் இருந்தும் நிம்மதியின்றித் தவிக்கும் பணக்காரர்களையும், பணமில்லாவிட்டாலும் உழைத்துவிட்டு நிம்மதியாகத் தூங்கும் ஏழைகளையும் வாலி ஒப்பிட்டு, மனமகிழ்ச்சியாய் வாழ்வதற்கு பணம் மட்டுமே காரணம் இல்லை என்பதை வாலியின் திரைஇசைப் பாடல்களில் தெளிவுபடுத்துகிறார்.

**முடிவுரை**

தமிழ்த்திரை உலகில் உடுமலை நாராயணகவி, கம்பதாசன், மருதகாசி, கண்ணதாசன் ஆகியோருக்குப் பிறகு வாலி தொடர்ச்சியாக திரை உலகில் தனக்கெனத் தனித்த இடத்தைத் தக்கவைத்தவர்.

மக்கள் மொழியில், திரை இசைப் பாடல்களை எழுதியுள்ளார். பகுத்தறிவுச் சிந்தனை, விவசாயி, உழைப்பாளி, பாட்டாளி, தொழிலாளர் எனச் சமூக அக்கறையுடன் பாடல்களைப் புனைந்துள்ளார். இயற்கை, காதல் மற்றும் மனித நேயச் சிந்தனைகளைத் தமது திரை இசைப்பாடல்களில் பதிவு

செய்து, நான்கு தலை முறைத் திரை கலைஞர்களுக்கும், தமிழகத்தின் மூன்று முதலமைச்சர்களுக்கும் திரைப்பாடல்களை எழுதி காவியக் கவிஞராகவும் வாலி திகழ்கிறார். அவரது திரை இசைப் பாடல்களால் மக்கள் மனங்களில் என்றும் ஒலித்துக்கொண்டிருக்கும் என்பதில் ஐயமில்லை.

**துணைபுரிந்த நூலகள்**


1. **திருஞானசம்பந்தம். ச, தொல்காப்பியம் பொருளதிகாரம் மூலமும் உரையும், கதிர் பதிப்பகம், சென்னை – 05, முதற்பதிப்பு, மார்ச் 2018.**
2. **நெல்லை ஜெயந்தா, வாலி 100, வாலி பதிப்பகம், சென்னை- 17, டிசம்பர்- 2013.**
3. **பதிப்பாசிரியர் குழு குறுந்தொகை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை, இரண்டாம் பதிப்பு 1981.**
4. **பாரதிராஜா.வீ, கவிஞர் வாலியின் படைப்புகளில் சமூக சிந்தனை, நான்காம் பதிப்பு ,சென்னை- 30, அக்டோபர்- 2022.**
5. **பொன். செல்லமுத்து, திரையெனும் கடலில் பாடலெனும் படகோட்டி–III, சென்னை – 17, முதற்பதிப்பு, 2019.**
6. **வசந்த் குமார். கே, என்றும் ஒலிக்கும் எம்.ஜி.ஆர் பாடல்கள் 100, சென்னை – 40, முதற்பதிப்பு, டிசம்பர் 2017.**
7. **வாலி, வாலி 1000 திரையிசைப்பாடல்கள் தொகுதி 1, குமரன் பதிப்பகம், சென்னை - 17, மறுபதிப்பு, மார்ச் 2020.**
8. **வாலி, வாலி 1000 திரையிசைப்பாடல்கள் தொகுதி 2, குமரன் பதிப்பகம், சென்னை - 17, மறுபதிப்பு, மார்ச் 2020.**


## Reference


[1]. Thirugnanasambandam S., Tholkappiyam Porulathikaram Original Text and Commentary, Kathir Pathippagam, Chennai – 05, First Edition, March 2018.
[2]. Nellai Jayantha, Vaali 100, Vaali Publications, Chennai-17, December 2013.
[3]. Editorial Board, Kuruntokai, New Century Book House Private Limited, Chennai, Second Edition, 1981.
[4]. Bharathiraja V., Social Thought in the Works of Poet Vaali, Fourth Edition, Chennai-30, October 2022.
[5]. Pon. Chellamuthu, Boatman of Songs in the Ocean of Cinema – III, Chennai – 17, First Edition, 2019.
[6]. Vasanth Kumar K., 100 Ever-Resonant MGR Songs, Chennai – 40, First Edition, December 2017.
[7]. Vaali, Vaali 1000 Film Songs: Volume 1, Kumaran Pathippagam, Chennai - 17, Reprint, March 2020.
[8]. Vaali, Vaali 1000 Film Songs: Volume 2, Kumaran Pathippagam, Chennai - 17, Reprint, March 2020.